# நெசவுத்தொழில்

முனைவர் ஸ்ரீ. ஜெயந்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கே.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"

என்கிறார் நாமக்கல் கவிஞர் இந்த அடிப்படையில் இந்தியாவில் வாழும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழில் பயிற்சி எடுத்துக்கொண்டு அதில் ஈடுபட்டால் அவனும் முன்னேறுவான் நாடும் முன்னேறும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது போல வெறும் ஏட்டுப்படிப்பு வாழ்க்கைக்கு அவ்வளவாகப் பயன்படுவதில்லை. அதனால்தான் ஏட்டுக் கல்வி படிக்கிறவனும்கூடவே ஏதாவது ஒரு தொழில் அடிப்படையிலான கல்வியைப் பெற்று வருவது கண்கூடு.

இந்தியாவில் சிறந்து விளங்கும் தொழில்களும் நெசவுத்தொழிலும் ஒன்று இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தி அவர்களும் நெசவுத்தொழிலுக்கு அடிப்படையாக அமையும் நூல் நூற்கும் தொழிலை அவ்வப்போது மேற்கொண்டார். தான் நூற்பது மட்டுமின்றித் தன் துணைவியாரகிய கஸ்தூரிபா அவர்களையும் தம் இயக்கத்தில் சேர்ந்தவர்களையும் நூல் நூற்குமாறு செய்தார். "இழையை நூற்று

நூலாடை செய்வீரே" என்ற பாரதியின் கூற்றும் இங்கு நினைவுகூரதக்கது.

நாட்டு முன்னேற்றத்திற்குரிய தொழில்கள் பலவற்றுள் நெசவுத்தொழில் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இதனால் தான் மகாகவி பாரதியாரும்.

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்

பண்ணி மலைக ளென வீதி குவிப்பொம்"

எனப்பாடினார்.

**நெசவுத்தொழிலின் முதன்மை**

கைத்தொழில் தமிழர்களுக்குப் புதிய தொழிலன்று. உலகத்தில் நாகரிகக் கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடு தமிழ்நாடு. கைத்தொழிலில் பழமையான தொழில் நெசவு. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க நூல்களில் நெசவைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். அக்காலத்தில் பருத்தி நூலினாலும் மயிரினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன. அவை பாம்பின் சட்டையைப் போன்றும், பாலாடையைப் போன்றும், வெண்மையும் நுண்மையும் பெற்றிருந்தன. சாயமும் அக்காலத்தில் துணிகளுக்கு ஏற்றப்பட்டன.

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

கட்டு நுண்வினைஞர்"

"அரவுரி யன்ன அறுவை"

"ஆவியன்ன அவிர்நூல் கலிங்கம்"

என்று ஆடைகள் பற்றிய செய்திகளைப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

**நெசவின் சிறப்பு**

குளிர், வெயில் முதலியவற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மனிதன் விலங்குகளின் தோலை ஆடையாக ஆதியில் அணிந்தான். பின்னர் இலைகளையும் புல்லையும் நார்களையும் பின்னி ஆடையாகப் பயன்படுத்தக் கற்றான் இதுவே நெசவின் தொடக்கம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்து நூல் நூற்றுத்துணி செய்யும் நெசவுக்கலை தமிழகத்தில் வளமாக இருந்தது.

"கூழைவித்தால் காதொன்றும் களைத

லூழணி தைவர லுடைபெயர்த்துடுத்லோ

நுழிநான்கே யிரண்டென மொழிய"

திரிமனையில் பருத்தியை அரைத்துப் பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரித்துக் கையினால் நூல் நூற்றுக் கைத்தறியில் துணி நெய்து இந்தியர் நெசவுக் கலையை வளர்த்தனர். திரிமனை, நெசவுக் கலை வேலையில் இந்தியர் பண்டைக்கால முதலே பயன்படுத்திவரும் கருவியாகும்.

**நெசவுக்கலையைப்பற்றிய அயல்நாட்டவர் சான்று**

இந்தியா நெசவுக்கலையில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்ததென்ற தகவல்களை அயல் நாட்டு ஆசிரியர்கள் கூறியுள்ள சான்றுகள்.

1. "இந்திய தேசத்தில் உற்பத்தியாகும், நேர்த்தியும் நயமும் மிகுந்த துணியைப்போன்று உலகில் வேறெங்கும் காணமுடியாது. இந்தியத் துணியினாலான ஓர் உடையை முத்திரை மோதிர மொன்றின் வழியாகச் செலுத்திவிடலாம். இது பருத்தி நூலினால் நெய்யப்படும் துணி. இத்தகைய துணி ஒன்றை நானே நேரில் பார்த்தேன்."
2. "இந்தியத் துணிகள் சிலந்தி வலையைப்போன்று மிக மென்மையாக இருக்கின்றன. இதனை அணிந்துகொள்ள விரும்பாத அரசனோ, அரசியோ இவ்வுலகில் இல்லை."

**கைத்தொழில்களில் நெசவின் முக்கியத்துவம்**

உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களை இரு வகைப்படுத்தலாம். அவைகளில் ஒன்று இயற்கைப் பொருள், மற்றொன்று செயற்கைப்பொருள். மனிதன் இயற்கையுலகில் வாழ்ந்தாலும் இயற்கைப் பொருள்களுக்கிடையில் வாழ்ந்தாலும்,அவன் இயற்கைப்பொருளை விரும்புவதைக்காட்டிலும் செயற்கைப் பொருளையே விரும்புகிறான். மனிதர்கள் தங்களுக்கேற்பட்ட இடையூற்றை நீக்கிக்கொள்வதற்கும் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் செய்துகொண்ட தொழில்கள் கைத்தொழில் என்று கூறப்படும். நெசவுத்தொழில் பழமையான தொழிலாகவும் நுட்பமான தொழிலாகவும் இருத்தலேயன்றி மனத்திற்கு அமைதியை உண்டாக்குந் தொழிலாகவும். இருக்கிறது. நெசவுத் தொழிலால் பிறவுயிர்களுக்கு இடைஞ்சலில்லாமையினாலேயே அத்தொழில் பாவமில்லாதிருத்தலை அறிந்தே

"செய்யுந் தொழிலெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை - வையத்தில்
தெள்ளுதமிழ் வேதஞ் செப்பிய நாள் சீர்படுத்தும்
வள்ளுவர் கொண்டதல்லவா" நூல் நெசவு - ப-5

என்பது தமிழ்நாட்டில் வழங்கும் செய்யுள்.

மக்களை மாக்களின்றும் பிரிப்பது ஆடையேயாகும். மக்களுடைய மானத்தை காத்துப் பெயரளவிலுள்ள மக்களைச் சிறப்புடைய மக்களாக்கும் பெருமை ஆடை நெய்தளிக்கும் நெசவுகாரர்களைச் சேர்ந்ததேயாகும்.

பஞ்சை பயன்படுத்தி நெய்தல் ஆடைகளேயல்லாமல். மரப்பட்டையிலும் நாரினை எடுத்துப் பின்னி மலைவாழ் குறவர் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை

" மரனாரும் மலையுறை குறவர்" நற்றினை 64-14

என்ற அடியால் நன்குஅறியலாம். இவைகளையேன்றி பட்டு நூலைப்பயன்படுத்திப்

பட்டாடை நெய்தனர் என்பதையும் எலியினுடைய மயிரைப் பயன்படுத்தி ஆடை நெய்தனர் என்பதையும்

"நூலினும் மயினும் நுழைநூற்பட்டினும்" சிலம்பு 14-205

என்னும் அடியால் அறியலாம்.

நூல் எக்காலத்தில் முதன்முதலில் நூற்கப்பட்டது? என்ன கருவிகளால் எப்படி நூற்கப்பட்டது? எவ்வளவு காலத்திற்கு பிறகு நெசவுத்தொழில் ஏற்பட்டது? வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட செய்திகள் உயர் வாணிபஞ்செய்த தமிழர்கள் தேக்கு, சந்தனமரம், தோகை, அரிசி, மாங்காய் முதலியவற்றுடன் துகில் என்ற ஆடையையும் கொண்டு சென்று வாணிபம் செய்திருக்கின்றனர். ஆரியர்களுடைய பழைய நூல்களில் ஆடையைப்பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. மரவுரிகளும் தோல்களும் ஆரியர்களுக்கு ஆடைகளாகப் பயன்பட்டன.ஆரியர் வருகைக்கு முற்பட்ட தமிழர் நகரமாகிய மொகஞ்சதாரோ ரப்பா முதலிய இடங்களில் ஆடைகளைப் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன.

**உணவும் உடையும்**

எத்தகைய நிலையில் உளளோர்க்கும் உணவும் உடையும் மிகவும் இன்றியமையாத பொருள்கள். அத்தோடு உறைவிடம். இவ்வுலகத்தை ஒரு குடையின் கீழ் ஆளும் மன்னர்களாயினும் கானில் வேட்டையாடிப் பிழைப்பவராயினும் ஒவ்வொருவனுக்கும் உண்பதற்கும் நாழி உணவும் உடுப்பதற்கு இரண்டு ஆடைகளும் அவசியம் எனப் புறநூனுற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

"கடுமாப்பார்க்கும் கல்லா ஒருவவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே" புறம் 189-1-5

இப்பாட்டு உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்பதனால் ஆடவர்கள் பொதுவாக இரண்டு உடைகள் அணிந்தனர் என்பது புலப்படும். இவற்றுள் ஒன்றை அரையில் கட்டி மோலாடையைத் தோளில் முன்னும் பின்னும் தொங்கவிட்டுக் கொள்வர்.

"இழைமருங்கறியா நுழைநூற்கலிங்கம்
ஏள்ளறு சறப்பின் வெள்ளரைக் கொளீஇ" கடாம்561-562
திருகோட்டறுவையர் வேண்டு வயிற்றிரிதர" நெடுநல் 35

மேலாடையைக் குடுமியைக் சுற்றித் தலைக்கட்டாகக் கட்டிக் கொள்வது உண்டு

"ஒன்று அமர் உடுக்கைக்கூழ் ஆர் இடையன" பெரும் 175

என ஆடு மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்ட இடையன் ஒருவன் குறிப்பிடப்படுகின்றான்.

பெண்கள் நீண்ட ஒற்றைய ஆடை நிலத்தைத் தொடும்படியாகத் தழைய உடுத்தினர்.

"சாந்து உளர் கூழைமுடியா, நிலம் தாழ்ந்த
பூங்கரை நிலம் தழீஇ தளர்பு ஒல்கி
பாங்குஅருங்காணத்துஉளித்தேள" கலித்-115:13-15

என அச்சத்தால் ஒதுங்கிக் காட்டில் கிடந்த ஒரு பெண் பேசுகிறாள். நிலத்தைத்

தொடும்படியாக உடுத்த நீல ஆடையை நடக்கும்போது கால்களுக்குத் தடையாயிராதபடி இந்தப் பெண் கையால் சிறிது மேலேறத் தழுவிக்கொண்டு செல்கிறாள் ஆகவே ஆடையை நிலம் தோய உடுத்தலும் வண்ண ஆடைகளை அணிதலும் பெண்கள் இயல்பு என்பது தெரிகிறது. மரங்களைக் காவி ஆம்பல் போன்றவற்றின் இலைகளால் ஆன தழை ஆடையை மகளிர் அணிந்தனர் என்றும் இத்தழை உடைக்காக அவர்கள் தழை கொய்வது உண்டு என்றும் சில பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளன.

"கள் கமழ் அலரதண் நறுங்காவி
ஆம்பகை நெறத் தழை அணிபெறத்தகை," நற்-123:6-7

**பெண்கள் கச்சு கட்டுதல்**

பெண்கள் மார்பில் கச்சு கட்டும் பழக்கம் உடையவராய் இருந்தனர். கச்சுகளை நெய்தபின் அதன் விளிம்புகளை முடித்தலும் ஒரு வகையினையாகும்.

"செம்பு நிறை கொண்மரும்வம்பு நிறை முடிநரும்" மதுரை 514

**வீரர்களின் உடை**

வீரர்கள் பூத்தொழிலமைந்த ஆடையை எடுத்து, அரையில் நீலக்கச்சையும் அணிந்தனர். இவர் தம் மார்பில் புலித்தோலால் செய்யப்பட்ட கவசமும் அணிவர்

"புவி நிக் கவசம் பூம் பொளி சிதை
எய்கணை விழித்த பகட்டு எழில் மார்பின்
மறலி அன்ன களிற்று மசையோனே"

புலித்தோல் கவசம் அணியும் வழக்கத்தை அன்றே கடைபிடித்தனர்

**முனிவர்களின் உடை**

முனிவர்கள் காவிக் கல்லைத் தோய்த்து உடுத்த உடையினராய் இருந்தனர்.

"கல் தோய்ந்து உடுத்த படிவப்பார்ப்பான்" முல்லை 59-61

**சட்டை அணியும் பழக்கம்**

இக்காலத்தைப் போல் சட்டை அணியும் பழக்கம் தமிழரிடையே இல்லை.தமிழகத்திற்கு வந்த வேற்று நாட்டாரகிய யவனர்கள் மெய்ப்பை என வழங்கும் ஒருவகை சட்டை அணிந்திருந்தனர்

"மத்திகை வளை இய மறித்து வங்கு செறிவு உடை
மெய்ப்பைபுக்கு மெருவரும் தோற்றத்து
வலி புனர் யாக்கை வண்கண் யவனர்" அகம் 20:8-10

**ஏழைகளின் ஆடை**

ஏழைகளின் ஆடை கிழிந்தனவாய்த் தையல்களால் சேர்க்கப்பெற்று வேற்று இழைகள் நுழைந்து வேர்வையால் நனைந்து இருந்ததோடு ஈரும் பேனும் கூட அவற்றில் இடம் பெற்றிருந்தன.

"வேரொரு நனைத்து வேற்றிழை நுழைந்த" பொருந -81

**நூலாடையும் பட்டாடையும்**

நூலாடையும் பட்டாடையும் அணிதல் பெருவழக்காய் இருந்தன.

"ஆவியன்ன வவிர்நூற் கலிங்கம்
இழை மருங்கறிய நூழை நூற் கலிங்கம்
எள்ளது சிறப்பின் வெள்ளரைக் கொள," கடாம் 561-562

இழைகள் மிக நுண்ணியவாய் தொழுந்திறம் வாய்ந்தனவாய் பூத்கொயில் முதலியன செய்யப்பெற்று முடிச்சுக்ளோடு கூடிய கரைகளையும் உடையவனவாய் அமைந்திருந்தன.

**காலத்திற்கேற்ற உடை**

அரத்தம் பூம்பட்டு முதலாகக் துகிர்க் கோவை ஈறாகச் சொன்னலை கார் காலத்தில் பரக்க அணிவன என்று சிலப்பதிகாரம் கூறுதலின் கார் காலத்தில் உடுத்துவதற்கேற்ற கார் காலஆடைகளும் கோடைகாலத்தில் உடுத்துவதற்கேற்ற கோடைகால ஆடைகளும் இருத்தன என்றறியலாகும்.

**ஊர்களும் துணிவகைகளும்**

மோட்டாத் துணி வழவழப்பான துணிஎன இருவகைப்பட்ட துணிகள் உற்பத்திசெய்யப்பட்டன. வழப்பான மெல்லிய துணியைக் காஞ்சிபுரம், மதுரைப்பாக்கம் வந்தவாசி ஆகிய ஊர்களில் தயார் செய்து அனுப்பினார்கள்

புதுச்சேரியில் நேர்தே மஸ்லீன் போன்ற மெல்லிய வழவழப்பான துணிகள் நெய்தார்கள் இத்தகைய துணிகளுக்குத் திருவண்ணாமலைத் துணி எனப்பெயர். இந்த இனம் வங்காள தேசத்தில் நெய்யப்பட்ட மெல்லிய இனத்தை ஒத்திருந்தது. சாலாம்புரித்துணி கினேத்துணி என்ற இனங்களும் உண்டு. துணிகள்மென்மையாலும் இழை செறிவாலும் காணப்படுதல் தகுந்த மெல்லிய நூலைக் கொண்டு நெய்வதால் மரத்திரமல்ல நெசவும் செறிவுடையதாயிருத்தல் வேண்டும்.

நான்கு விதமான துணிகள் புதுச்சேரியிலிருந்து பிறநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள் அவை:

1. வெள்ளைத் துணிகள்.
2. நீலத்துவைத்த துணிகள்

3. சாயம் ஏற்றி நூல்களைக் கொண்டு உற்பத்தி செய்த துணிகள்.

4. ஆச்சுக் குத்திய துணிகள் உனப்படுவனவாம்

நீலத்துவைத்த துணிகள் சேலம் பரங்கிப் பேட்டை முதலிய ஊர்களிலும் தயரித்துப் புதுச்சேரிக்கு அனுப்பி வைத்தனர். சேலத்தில் சாலாம்புரி என்ற இனம் நெய்யப்பட்டது. இரட்டுத் துணி தயாரிப்பதில் கூடலூர் சிறப்புப் பெற்றிருந்தது.இந்த இனத்துணி மேசை விரிப்பு, கால்சட்டை, மேல்சட்டை, முதலியவற்றிற்குப் பயன்பட்டது.

(ஆனந்தரங்கர் தினப்படி சேதிக்குறிப்பு,கடல் வாணிகமும் தரைவாணிகமும். ப-70)

புதுவையிலிருந்து அனுப்பப்பெற்ற துணிகள் மென்மையாகவும் அழகாகவும் பார்த்தால் ஆவலைத்தூண்டுவனவாகவும் இருந்தன் காரணம் துணியின் நேர்த்தியும் சாயத்தின் மேன்மையுமாகும். நம்முடைய நாடு பழங்காலந்தொட்டே நெசவுத்தொழிலில் மேன்மையுற்று விளங்கிவந்தது. மற்ற நாட்டினரும் வியக்கும்வண்ணம் நுட்பமான ஆடைகளை நம்நாட்டார் தயாரித்துவந்தனர். ஆடைகளின் சிறப்பினை நம்முடைய பழந்தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதும் சங்க காலத்தில் நெசவுத்தொழில் எவ்வாறு மேன்மையுற்று விளங்கியது என்பதனையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

**பார்வை நூல்கள்**


- இளங்கோவடிகள் (உ-ஆ) சிலப்பதிகாரம்.
- பத்துப்பாட்டு முதல் தொகுதி.
- பத்துப்பாட்டு முதல் தொகுதி.
- க.ப.அறவாணன், ஆய்வுக்கொத்து.
- சுலைமாமன் (அராயர்) ஒன்பதாம் நூற்றாண்டல் இந்தியா வந்தபோது கூறியது. "இந்திய கைத் தொழில்கள்"ப-13
- மார்க்க போலோஎன்பவர் இந்தியா வந்தபோது கூறியது. "இந்திய கைத் தொழில்கள்" ப-13
- கோவிந்தன்.பெ.நூல் நெசவு கழக வெளியீடு
- நாராயணசாமி ஐயர்(உ-ஆ), அ. நற்றிணை, கழக வெளியீடு,
- ஆரங்கர் தினப்படி சேதிக்குறிப்பு, கடல் வாணிகமும் தரைவாணிகமும்.
- எட்டுத்தொகை - கழக வெளியீடு.